DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

In the Court of the Judicial Magistrate No.II, Mayiladuthurai

STC. No. 65/2020

Dt. 26.05.2025

**Deposition of LW8 examined as PW6**

| | |
|---|---|
| Name | சங்கர் (SI of Police) |
| Father's/Husband's Name | சாமிதுரை |
| Village | பந்தநல்லூர் காவல் நிலையம் |
| Taluk | |
| Age | 55/2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 26.05.2025

(A1, A2 present)

**முதல் விசாரணை**

நான் தற்போது பந்தநல்லூர் காவல்நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். பாகசாலை காவல் நிலைத்தில் சிறப்பு உதவி ஆய்வாளராக நான் பணியில் இருந்த போது 13.10.2019 ம் தேதி சீர்காழி அரசு மருத்துவமனையில் இருந்த கிடைத்த தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சயையில் இருந்த பஞ்சவர்ணம் மகன் முத்துகுமரன் என்பவரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் நிலையம் வந்து நிலைய மனு எண் 217/2019 ஆக பதிவு செய்து விசாரணைக்கு பின்னர் கடந்த 19.10.2019ம் தேதி 16.00 மணிக்கு காவல்நிலைய குற்ற எண். 37/2019 இதச பிரிவுகள் 294(b),323,506(1) ஆகிய சட்டபிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **அந்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** வழக்கு ஆவணங்களை மேல்விசாரணை செய்யும் பொருட்டு உதவி ஆய்வாளர் ராஜதுரை அவர்களின் பார்வைக்கு வைத்தேன். அவர் என்னை விசாரணை செய்தார்.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை**

முதல் தகவல் அறிக்கையில் சம்பவ நாள் என 13.10.2019 நேரம் 12.30 மணி என்று கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கையில் காலம் 3(b)ல் காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.10.2019 நேரம் 16.00 என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். சம்பவத்திற்கு பிறகு 6 நாட்கள் கழித்துதான் காவல்நிலையத்தில் தகவல் பெறப்பட்டது என்றால் 13.10.2019 அன்று காவல் நிலையத்தில் தகவல் பெறப்பட்டு 14.10.2019 அன்று சமுதாய பதிவேடு எண் வழங்கப்பட்டது. மனு பதிவு செய்து 5 நாட்கள் காலதாமதமாகத்தான் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். மனு எண். 217/2019 யை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. தென்னரசு த/பெ. ராமசாமி என்பவர் தான் அ.சா.1யை மருத்துவமனைக்கு அழைத்து சென்றதாக புகார் வாக்குமூலத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புகார் வாக்குமூலத்தில் அ.சா.1 னின் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் பிடிக்காமல் அதன் விரோதத்தின் பெயரால் தான் எதிரிகள் தன்னிடம் பிரச்சனை செய்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த ஆஜர் 2ம்எதிரி கொடுத்த புகார்வாக்குமூலத்தின் அடிப்படையில் முத்துகுமரன், ஆறுமுகம், செல்லதுரை, சுசீலா ஆகியோர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு

ச. சங்கர்

26/5/25

செய்துள்ளேன் என்றால் சரிதான். ஆஜர் எதிரிகள் கொடுத்த புகாரில் இருந்து தப்புவதற்காக உண்மை நிகழ்வை மறைத்து எதிரிகள் மீது பொய்யாக புகார் கொடுத்துள்ளார்கள் என்றால் சரியல்ல. புகார் கொடுத்த காலத்தில் எதிரிகள் கட்டகழியால் தாக்கியதாக குறிப்பிட்டு புகார் வாக்குமூலம் அளித்துள்ளார் என்றால் சரிதான். இந்த தகவலே பொய்யாக கூறப்பட்டது என்றால் சரியல்ல. நீங்கள் சரிவர விசாரணை செய்யாமல் எதிரிகள் மீது காலதாமதமாகவும், பொய்யாகவும் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்துள்ளீர்கள் என்றால் சரியல்ல.

என்னால் எழுதிக்கொள்ளப்பட்டு, எதிரியின் முன்னிலையில் சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் சரியானதென்று ஏற்கப்பட்டது.

26/05/25

நீதித்துறை நடுவர் எண்-11
மயிலாடுதுறை